**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

**11th ஆகஸ்ட் / August 2024 ஞா யிறு ஆராதனை**
Outreach & Social Concerns Sunday

| | |
|---|---|
| **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. ஜெஸ்ஸி அலெக்ஸ்**<br>Mrs. Jesse Alex |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. ஜெஸ்ஸி அலெக்ஸ்**<br>Mrs. Jesse Alex |
| **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**அன்புள்ள இயேசு நேசர்**

*1. அன்புள்ள இயேசு நேசர்,*
*எனக்கெல்லாம் அவரே*
*பதினாயிரம் பேர்களில்*
*சிறந்தவர்.*
*அவர் பள்ளத்தாக்கின் லீலி,*
*எனதெல்லாம் அவரே;*
*என் ஆத்துமத்தின்*
*பிராண நாயகர்*
*துக்கத்தில் என் ஆறுதல்*
*துன்பத்தில் எனதின்பம்,*
*என் கவலைகளெல்லாம்*
*தாங்குவார்.*

***அவர் பள்ளத்தாக்கின் லீலி,***
***அவர் காலை விடிவெள்ளி,***
***பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்***

*2. என் சஞ்சலங்கள் நீங்க*
*என் பாவம் மா அன்பாய்*
*சுமந்து அவர் ஜீவனை விட்டார்;*
*நான் யாவையும் வெறுத்தேன்*
*என் நேசமீட்பர்க்காய்,"*
*அவர் ஒருபோதும் கைவிட*
*மாட்டார்,*
*லோகம் என்னை வெறுத்து*
*சாத்தான் சோதித்தாலும்*
*மீட்பர் எனக்கு ஜெயம்*
*தருவார்.*

*3. கர்த்தாவின் சித்தத்திற்குக்*
*கீழ்ப்படிவேனானால்*
*எல்லாத் துன்பத்தையும்*
*ஜெயிப்பேன்;*
*எனக்குப் பயமென்ன? அவர்*
*என் பங்கானால்*
*என் ஆத்துமத்தின்*
*மன்னா அவரே;*
*ஜீவ நதிகள் பாயும்*
*இராஜ்யத்தைச் சேர்கையில்*
*அவர் திருமுகத்தை நான்*
*காண்பேன்.*

| | |
|---|---|
| **மாறி வாசித்தல் *32*ம் ஞாயிறு**<br>*"சங்கீதம் 98"* | **சபையார் இணைந்து**<br>Congregation |

**"தேவனுடைய இரட்சிப்பு"**

Psalter Reading "Psalm 98"

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**எந்நாளு மேதுதிப்பாய்**

**எந்நாளு மேதுதிப்பாய் - என்னாத்துமாவே, நீ**
**எந்நாளு மேதுதிப்பாய்!**

**இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த**
**எண்ணிலா நன்மைகள் யாவு மறவாது,**

*1. பாவங்கள் எத்தனையோ, - நினையா திருந்தாருன்*
*பாவங்கள் எத்தனையோ?*
*பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்*
*பாரினில் வைத்த மகா தய வைஎண்ணி,*

*2. எத்தனையோ கிருபை, - உன்னுயிர்க்குச் செய்தாரே,*
*எத்தனையோ கிருபை?*
*நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி,*
*நித்தியமான ஜீவனை மீட்டதால்*

*3. நன்மையாலுன் வாயை - நிறைத்தாரே, பூர்த்தியாய்*
*நன்மையாலுன் வாயை!*
*உன் வயது கழுகைப்போல் பலங்கொண்டு*
*ஒங்கு இளமைபோ லாகவே செய்ததால்*

*4 பூமிக்கும் வானத்துக்கும் - உள்ள தூரம் போலவே,*
*பூமிக்கும் வானத்துக்கும்,*
*சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்*

*சாலவும் தங்குமே சத்தியமேயிது,*

*5. மன்னிப்பு மாட்சிமையாம் - மாதேவனருளும்*
*மன்னிப்பு மாட்சிமையாம்;*
*எண்ணுவாயோ கிழக்கும் மேற்கும் தூரமே?*
*எல்லாம் உன்பாவம் அகன்றதத்தூரமே,*

*6. தந்தைதன் பிள்ளைகட்கு - தயவோ டிரங்கானோ*
*தந்தை தன் பிள்ளைகட்கு?*
*ஏந்த வேளையும் அவ ரோடு தங்கினால்,*
*ஏற்றிப் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே.*

---

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திரு . ரவி ஐசாயா***
***யாக்கோபு 2 : 14 - 18*** — Mr. Ravi Isiah

Scripture Reading
James 2 : 14 - 18

***அருளுரை*** — ***திரு. என்தன் மோசஸ்.***
Sermon — Mr. Anton Moses

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>தாசரே, இத்தாரணியை அன்பாய்</u>***

***தாசரே, இத்தாரணியை அன்பாய்***
***யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.***
***நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்***
***காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,***
***வெளிச்சம் வீசுவோம்***

*1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை,*
*வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,*
*உரித்தாய் யேசு பாவப் பாரத்தை*
*நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே.*

*2, பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்*
*பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,*
*யேசு கனிந்து, திரிந்தனரே.*

*3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை*
*நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,*
*நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே,*

*4. இந்த தேச மாது சிரோமணிகள்*
*விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;*
*சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,*
*நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட*

*5. மார்க்கம்தப்பி நடப்போரைச் சத்ய*
*வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்*
*ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,*
*நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம்*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***யாக்கோபு 2 : 8***
James 2 : 8

***8. உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**